RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பல்

மு.இராணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-3, தமிழ்நாடு, இந்தியா

# Hospitality in Sirupanaatrupadai

**M. Rani** [a, *]

[a] Department of Tamil, Azhagappa University, karaikudi-3, Tamil Nadu, India

* Corresponding Author: raniganeshphd@gmail.com

Received: 07-04-2024
Revised: 23-06-2024
Accepted: 07-07-2024
Published: 30-07-2024

**ABSTRACT**

"To all those who live in Mantinillat

Givers are givers of life"[1]

If you give food to those living in the soil, it is equivalent to giving life

"What is virtue, you ask

Don't forget to listen! Mannuirk Kellam

When he saw that there was no body, no clothes and no cover" [2]

The basic necessities of human life are food, clothing and shelter. The ancient society dictates that the best virtue is to provide all three. In this way human society has the age-old hospitality as its chief characteristic. In this way, this article takes the hospitality of Palanthamizhar in small style.

**Keywords:** Sirupanattrupadai, Crab, Nalliyakodan, Hospitability, Mudirai

## முன்னுரை

பத்துப்பாட்டுள் மூன்றாவது இடம் பெறுவது சிறுபாணாற்றுப்படை. ஒரு சிறுபாணன் மற்றொரு சிறுபாணனை ஆற்றுப்படுத்துவது சிறுபாணாற்றுப்படை எனப்படும். சிறுபாணாற்றுப்படை 269 அடிகளைக் கொண்டது. நேரிசை ஆசிரியப்பாவால் ஆனது. பாணர்கள் குழல், யாழ் முதலிய இசைக்கருவிகளைக் கொண்டு இசைத்துப் பாடுபவர்கள். குரல்வழி - வாய்ப்பாட்டு பாடும் கலைஞர்களை இசைப்பாணர்கள் என்றும். யாழ் இசைத்துப்பாடுபவர்களை யாழ்ப்பாணர்கள் எனவும் அழைப்பர். இவர்களில் சிறிய யாழ் இசைப்பவர்கள் சிறுபாணர்கள் எனவும் பெரியயாழ் இசைப்பவர்கள் பெரும்பாணர்கள் எனவும் இருவகைப்படுவர். ஒய்மா நாட்டை ஆண்ட ஒரு சிற்றரசன் நல்லியக்கோடன் இவன் சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் ஆவான். ஒய்மான்நாடு திண்டிவனம் அருகில் உள்ளது. அவனுடைய நாட்டில் வேலூர், எயிற்பட்டினம், கிடங்கில், ஆமூர், ஆகிய ஊர்கள் இருந்தன. சிறுபாணாற்றுப்படையைப் பாடியவர் இடைக்கழி நாட்டுநல்லூர் நத்தத்தனார். சங்கநூல்கள் பதினெட்டில் சங்ககாலப் பாணர்கள் பற்றிக் கூறுவது நான்கு நூல்கள் ஆகும். அவ்வகையில் சிறுபாணாற்றுப்படையில் காணப்படும் மக்களின் உணவு முறைகளையும் விருந்தோம்பல் பண்பினையும் எடுத்தியம்புவதாக இக்கட்டுரை அமைகிறது.

விருந்தோம்பல் என்னும் அறம்

“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

நோக்கம் குழையும் விருந்து”[3]

விருந்தினருக்கு முகம் சுளிக்காமல் இன்முகத்துடன் வரவேற்க வேண்டும் என்கிறார். வள்ளுவர்.

விருந்தோம்பல் அறம் என்பது இல்லறத்தில் தலைவனும் தலைவியும் இணைந்து விருந்தினரை உபசரிப்பது ஆகும். கோவலன் கண்ணகியைப் பிரிந்திருந்த சூழலில் விருந்தோம்பல் செய்ய இயலாத நிலையை,

“அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை”[4]

என்னும் அடிகள் சுட்டுகின்றன. விருந்தோம்பலை தொல்லோர் சிறப்பு என்கிறார் இளங்கோவடிகள்.

“ஆற்றுநர்க்குஅளிப்போர்அறவிலைபகர்வோர்

ஆற்றாமாக்கள்அரும்பசிகளைவோர்

மேற்றேஉலகின்மெய்ந்நெறிவாழ்க்கை”[5]

மக்களின் அரும்பசி களைவது மிகச்சிறந்த அறம் என்கிறது மணிமேகலை. தன்னை நாடிவருவோர் ஒருவராகவோ பலராகவோ ஒரு நாளல்ல பல நாட்கள் சென்றாலும் முதல் கண்ட மகிழ்ச்சியில் சிறுதினும் குறையாமல் காணப்படுவர். இதனை

“ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்

பலநாட் பயின்று பலரொடு செல்லனும்

தலைநாட் போன்ற விருப்பின் மாதோ”[6]

என்கிறது புறநானூறு.

## ஆற்றுப்படை

ஆற்றுப்படை என்பது ஒரு வள்ளலிடம் பரிசு பெற்ற ஒருவன், தாம் பெற்ற பரிசிலைப் போல் தம்மைப்போன்று வறிய நிலையில் வாடும் மற்றொருவனும் பெற வேண்டும் என்று எண்ணித் தம் எதிரில் வரும் பாணனிடம் வள்ளல்களின் சிறப்பையும் நாட்டின் பெருமையையும் கூறித் தன்னைப் போல் அவனும் பரிசில் பெறவேண்டும் என்று வழிநடத்துதல் (ஆற்றுப்படுத்துதல்) ஆகும்.

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇச்

சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்”[7]

என்று தொல்காப்பியம் சுட்டுகின்றது.

விருந்தோம்பல்

“விருந்தே தானும்

புதுவது புனைந்த யாப்பின் மேற்றே”[8]

புதியதாக வரும் இலக்கியங்களை விருந்து எனச் சுட்டுகிறது தொல்காப்பியம். இதன் அடிப்படையில் பிறந்தது விருந்து என்னும் சொல். புதிது புதிதாக வீட்டிற்கு வருபவர்களை விருந்தினர் என்பர். வள்ளுவர் திருக்குறளில் விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தை வகுத்துள்ளார். சாவா மருந்தாகிய அமிழ்தமே என்றாலும் பிறற்கு கொடுத்து உண்ணவேண்டும் என்கிறார்.

## பரதவரின் விருந்தோம்பல்

எயிற்பட்டினத்திற்குச் செல்லும் வழியில் பரதவர்களின் விருந்தோம்பலையும் ஏற்றுக் கொள்ளுமாறு பாணன் கூறுவது. பூக்கள் நிறைந்த சோலைகளாகிய கிடங்கில் என்னும் ஊரினைச் சேர்ந்த நல்லியக் கோடனின் அன்பில் வாழ்ந்தனர் மக்கள். ஓங்கிய உயர்ந்த ஒட்டகம் துயில் கொண்டிருப்பது போல் குவிக்கப்பட்ட நறுமணமிக்க அகில்கட்டைகளை நெருப்பிட்டுக் கொளுத்தும் போது ஏற்படும் செந்தீயும் கரும்புகையும் கொண்ட வளமிக்க நாட்டில் வலிமையான பெரிய தோள்களையும் மதிஏங்கும் மாசற்ற குணத்தையுடையவர்கள் பரதவப் பெண்கள். இவர்கள், தாள இறுதியுடைய குழலின் தன்மைக்கு ஏற்றாற்போல் ஆடும் விறலியருடன் வரும் பாணருக்கு, அரித்த பழையதாகிய கள்ளையும் உலர்ந்த குழல் மீன் குழம்பையும் மகிழ்வுடன் கொடுத்து விருந்தோம்பல் பண்பினைச் செய்தனர். இதனை,

“ஓங்கு நிலை ஒட்டகம் துயில் மடிந்தன்ன,
வீங்கு திரை கொணர்ந்த விரை மர விறகின்,
கரும் புகைச் செந்தீ மாட்டிப் பெருந்தோள்
மதி ஏக்கறூஉம் மாசு அறு திருமுகத்து
நுதி வேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம் படு தேறல் பரதவர் மடுப்ப,
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,
தளை அவிழ் தெரியல் தகையோற் பாடி
அறல் குழல் பாணி தூங்கியவரொடு,
வறல் குழல் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர்”[9]

என்னும் வரிகள் சுட்டுகின்றன.

## வேலூரில் எயினர் விருந்து

சில வளையல்கள் அணிந்து, மாந்தளிர் மேனி போன்ற விறலியருடன் வரும் பாணருக்கு மிகுந்த வெப்பம் மிகுந்த குரம்பையில் (குடிசை) வாழும் எயினர் குலப்பெண்டிர் இனிய புளியினால் சமைத்த வெப்பமான சோறினையும் ஆமான் சூட்டு இறைச்சியையும் கொடுத்து விருந்தோம்பல் செய்தனர், என்பதை,

“உறுவெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை
எயிற்றியர் அட்ட இன் புளி வெஞ்சோறு,
தேமா மேனி சில் வளை ஆயமொடு,
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவிர்”[10]

என்னும் அடிகள் சுட்டுகின்றன. “ஆமான்” என்பது ஆ+மான் எனப் பிரித்துப் பொருள் கொண்டால் மான் போன்ற பசு எனப் பொருள் கொள்ள முடியும்.

## ஆமூர் வளமையும் உழத்தியரின் விருந்தோம்பலும்

அரியகாவலை உடைய பெரிய ஊர்களையும் குளிர்ச்சியான நீர்நிலைகலையும் உடைய ஆமூரில் வாழும் எருதினைப் போல் வலிய கழுத்தினையும் தோள்களையும் உடைய வெற்றிவாகை சூடும் உழவர்களின் தங்கைமார்களாகிய உழத்தியர்கள், யானையின் தும்பிக்கை போல் பின்னின மயிர் கிடக்கும் சிறிய முதுகை வளைத்து வளையல்கள் அணிந்த அழகிய கைகளால் இரும்பு முகம் தேய்த்த வைரம் பாய்ந்த உலக்கையால் குற்றிப் பக்குவப் படுத்தப்பட்ட அரிசியால் சமைத்த வெண்சோற்றுடன் பிளந்த கால்களைக் கொண்ட நண்டின் கலவையைத் தருவார்கள். ஆமூரின் வளமையையும் உழத்தியரின் விருந்தோம்பலையும்

"வலம்பட நடக்கும் வலி புணர் எருத்தின்

உரன் கெழு நோன் பகட்டு உழவர் தங்கை,

பிடிக்கை அன்ன பின்னு வீழ் சிறுபுறத்துத்

தொடிக் கை மகடூஉ, மகமுறை தடுப்ப,

இருங்காழ் உலக்கை இரும்பு முகம் தேய்த்த

அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு

கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்"[11]

என்னும் அடிகள் சுட்டுகின்றன. "கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்" என்பதற்கு நச்சினார்க்கினியர் - "கவைத்த காலினுடைய ஞெண்டும் பீர்க்கங்காயுங் கலந்த கலப்புடனே" பெறுவிர்.

## மன்னனின் விருந்தோம்பல் பண்பு

தன்னை நாடி வரும் இரவலரை மன்னன் அன்புடன் வரவேற்று மாசு இல்லாத தூய்மையான மூங்கிலின் தோலை உரித்தாற்போல் ஆடையை உடுக்கச் செய்தும் சினம் கொண்டு எழும் அரவம் போன்று எழுச்சியைத் தரும் கள்ளினை உண்ணச் செய்தும் நெருப்புக் கடவுள் வேண்டியதால் காண்டவம் என்னும் காட்டினை எரித்த அம்பையுடைய அம்புறாத் தூணியையும் பூக்கள் வரைந்த கச்சையையும் அணிந்த அர்ச்சுனனின் அண்ணனாகிய வீமசேனன் பனியுடைய இமயம் போன்ற மார்பை உடையவன். அவன் எழுதிய குற்றமற்ற நூல்களில் இருந்து வழுவாது அவற்றில் குறிப்பிட்டுள்ள பலவகையான உணவுகளைச் சமைத்ததை,

"மாசில்

காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇப்

பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,

கா எரியூட்டிய கவர் கணைத் தூணிப்

பூ விரி கச்சைப் புகழோன் தன் முன்

பனி வரை மார்பன் பயந்த நுண் பொருள்

பனுவலின், வழாஅப் பல் வேறு அடிசில்"[12]

என்னும் அடிகள் சுட்டுகின்றன. சமைத்த உணவை, விண்மீன்கள் சூழ்ந்த நீல விசும்பில் தம் இளங்கதிர்களைப் பரப்பச்செய்யும் கதிரவனை இகழும் மிகுந்த ஒளிபொருந்திய பொற்கிண்ணங்களில் பாணர்களுக்கு மிகவும் பிடித்த உணவினை தாமே முன்னின்று உண்ணச்செய்து அவர்களை, களிப்புறச் செய்வான் நல்லியக்கோடன். இதனை,

"வாள் நிற விசும்பிற் கோள்மீன்சூழ்ந்த

இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து,

விளங்கு பொற்கலத்தில் விரும்புவன பேணி

ஆனா விருப்பின் தான் நின்று ஊட்ட"[13]

என்பதை என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன. இதன்வழி நல்லியக்கோடனின் சிறப்பும் அவனின் விருந்தோம்பல் பண்பும் புலப்படும்.

## முடிவுரை

பத்துப்பாட்டு என்னும் அரிய நூலுக்கு உரை எழுதியவர் நச்சினார்க்கினியர். பழந்தமிழ் இலக்கியங்கள் மக்களின் பண்பாடு நாகரிகம் கலாச்சாரம் முதலியவற்றை எடுத்தியம்புகிறது. தமிழர்தம் பண்பாட்டில் தலை சிறந்தது விருந்தோம்பல். இப்பண்பு காலம்காலமாக தொடர்ந்து வருகிறது. உயிரை வளர்க்கும் உணவு ஒரு அருமருந்தாகும். உயிரின் நீட்சிக்கும் உறவின் நீட்சிக்கும் ஒருபால மாக அமைவது உணவும் அதை ஓம்பும் முறையுமாகும். அவ்வகையில் சிறுபாணாற்றுப்படையில் மக்கள் முதல் மன்னன் வரை விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கியதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

## References

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், நாவலர் நாட்டார் தமிழ்உரைகள், தொகுதி.4, தமிழ்மண்பதிப்பகம், முதற்பதிப்பு.2007

பரிமேலழகர், திருக்குறள் உரை,

நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், நாவலர் நாட்டார் தமிழ்உரைகள், தொகுதி.1, தமிழ்மண்பதிப்பகம், முதற்பதிப்பு.2007

இளம்பூரணர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம், பவை பப்ளிகேஷன்ஸ், நான்காம் பதிப்பு,2014

துரைசாமிப்பிள்ளை, ஔவை.சு உரை , புறநாநூறு (2 தொகுதிகள்) திருநெல்வேலி சைவ சிந்தாந்தநூற்பதிப்புக் கழகம், 1996

டாக்டர் கதிர் முருகு, சங்க இலக்கியம் பத்துப்பாட்டு முழுமை, சாரதா பதிப்பகம், சென்னை14.பதிப்பு.2023

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License